Enrich, XII(I): 1 - 5, July – Dec., 2020

# சிலம்பில் - கற்புக்கோட்பாடு

சு.பானுமதி, இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி

**முன்னுரை**

கலையின் இனிமையை, கற்பின் திண்மையை, வீரத்தின் ஆற்றலை விளக்க எழுந்த தமிழ்ப் பேரிலக்கியம் சிலம்பு. தமிழினத்தின், தமிழ்ப் பெண்ணின் சூழல் காலம் காலமாக அடிமைப்பட்டுக்கிடக்கும் பெண்களை மாற்ற உருவானது காப்பியம். கற்பு என்ற கருதுகோள் (concept) பெண்ணடிமைக்காக ஆணாதிக்க சமுதாயம் விதித்த நெறி. 'பெண்ணடிமைத் தனத்தை வலியுறுத்தும் நூல் என்றும் விபசாரத்தில் ஆரம்பித்து பத்தினித்தனத்தில் வளர்ந்து முட்டாள்தனத்தில், மூடநம்பிக்கையில் முடிந்த பொக்கிஷம்' என்றும் பெரியார் சிலம்பை விமர்சிக்கின்றார். 'களங்கமற்ற பெண்ணொழுக்கத்தின் எடுத்துக்காட்டாகவும், கற்பு நெறியின் அளவுகோலாகவும் படைக்கப்பட்டவள் கண்ணகி.' தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்' என வள்ளுவர் உரைத்த மங்கை கணவன் போற்றா ஒழுக்கம் புரிந்தபோதும் அதை மாற்றாது வாழ்ந்தவள் கண்ணகி. கணவனை 'கள்வன் அல்லன்' என நிருபிக்க தன் பத்தினித்தன்மையினால் மதுரை மாநகரையே தீக்கிரையாக்கிய பத்தினி தெய்வம் என்பார் மா.பொ.சிவஞானம். இருவர் தம் கருத்தும் கண்ணகியின் கற்புத்திறத்தை முன்மொழிகின்றன.

நாணும் மடனும் நல்லோர் ஏத்தும் பேணிய கற்பும், பெருந்துணையாக என்னோடுவந்து என்துயர் நீக்கினாய் என்ற கோவலன் கூற்றும் பெண்ணிற்கு காவல் புரிவதும், துணை நிற்பதும் கற்பு என்பதை உறுதிப்படுத்துகின்றது.

**கண்ணகி பெற்ற வெற்றிகள்**

காப்பிய நாயகி கண்ணகி மூலம் இரண்டு வெற்றிகளைக் காட்டுகிறார் இளங்கோ.

1. திண்மையான கற்பு எதையும் ஏற்கும்.
2. உறுதியான கற்பு ஊரையும் எரிக்கும்.

**1. திண்மையான கற்பு எதையும் ஏற்கும்**

"போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்றும் தீதிலா வடமீனின் திறமிவள் திறமென்றும் மாதரார் தொழுதேத்தும் வயங்கிய பெருங்குணத்துக் காதலாள் ………" என்று இளங்கோ கண்ணகியின் கற்பு போன்றது அருந்ததியின் கற்பு என்று கண்ணகியின் 'கற்பு நிலை' யுடன் பாத்திரத்தை அறிமுகம் செய்கின்றார்.

கண்ணகியின் பெருங்குணங்களிலேயே சிறப்புடையதாகப் பேசப்படுவது அவளது கற்பு. கோவலனும் 'மனையறம்படுத்த காதையில்' கண்ணகியின் கற்பினையே பாராட்டி அவள் அழகை உறுதிப்படுத்துகிறான். ஒரு பெண்ணின் சிறப்பினைப் பிற பெண்டிர் போற்றுவதை விட அவளுடன் உறவுகொண்ட கணவன் போற்றுவதே சாலச்சிறந்தது.

"மாசறு பொன்னே வலம்புரி முத்தே" என்று அடுக்கடுக்காக படுக்கையறையில் கண்ணகியுடன் கோவலன் கூறும் காதல் மொழிகளுக்கு அவள் மறு மொழி கூறாமல் மௌனம் சாதிப்பதை 'தயங்கிணர்க் கோவலன் தன்னொடு தருக்கி' என்று இளங்கோ மீண்டும் கண்ணகியின் தனித் தன்மையைச் சுட்டிக்காட்டுகின்றார்.

சிலம்பில் கோவலனிடம் கண்ணகி பேசும் இடங்களை விரல்விட்டு எண்ணி விடலாம். கோவலன் மாதவியிடம் சென்றிருந்த காலத்தில் கற்பில் சிறந்த கண்ணகி பிரிவாற்றாது

வருந்தித் தன்னை அழகு செய்து கொள்ளவில்லை. திங்கள் போன்ற அவள் வான் முகத்தில் சிறு வியர்வை தோன்றவில்லை. அவள் கயல்விழி அஞ்சனம் தீட்டி அழகு செய்யப்படவில்லை. வாநுதலில் திலகம் தீட்டப்படவில்லை. முகம் புன்முறுவல் பூக்கவில்லை. கூந்தலில் புனுகு நெய் பூசப்படவில்லை. அவளின் செயலற்ற நெஞ்சத்தினை.

“அஞ்செஞ்சீறடி அணிசிலம் பொழிய
மென்றுகிலல்குல் மேகலை நீங்கக்
கொங்கை முன்றிற் குங்குமம் எழுதாள்
…. ….. …. …..
காதலர்ப் பிரிந்த மாதர நோதகு”

(சிலம்பு. 43 – 47)

என்ற இளங்கோவின் கூற்று படிப்பவர் தம் நெஞ்சை உருக்குகின்றது.

கோவலன் பிரிவு எப்படிப்பட்ட இழப்புகளை ஏற்படுத்தியது என்று உணர்வுப்பூர்வமாக கண்ணகி வெளிக்காட்டவில்லை. கோவலனைப் பிரிந்த கொடுமையையோ, தனக்கு நேர்ந்த காமத் துயரையோ கூறாமல் தான் கண்ட கனவை கனத்த நெஞ்சத்துடன் வெளிப்படுத்துகிறாள். அதற்கு உபாயமாக தேவந்தி சோமகுண்டம் சூரியகுண்டம் துறைமூழ்கி காமவேள் கோட்டம் தொழுதால் கணவரோடு தாமின்புறுவர் உலகத்துத் தையலார் என்று கூறுகிறாள். இதற்கு கண்ணகி ‘பீடன்று’ என்று ஒரே சொல்லில் பதில் கூறுகின்றாள். இவ்வாறு உபாயங்கள் தேடி, விரதங்கள் இருந்து, தீர்த்தமாடி கணவரிடமிருந்து அன்பைப் பெறுவது பெருமைக்குரியதல்ல என்ற அவர் கூற்று குணச் சிறப்பை மேலும் வெளிப்படுத்துகிறது. இப்படி ஒரே ஒரு சொல்லால் தன் பாத்திரப் பெருமை முழுவதும் வெளிப்படுத்தும் காப்பியத்தலைவி வேறுயாரும் இல்லை எனலாம். சிலம்பின் மாண்பு முழுவதும் கண்ணகியின் மாண்பு பேசுவதிலேயே அடங்குகிறது. கண்ணகியின் மாண்பு முழுவதும் பீடன்று என்ற சொல்லில் அடங்கிவிட்டது.

அடுத்து கண்ணகி பேசுவது கோவலனிடம் இப்போது ஒருசொல் கூடுகிறது. ஒன்று இரண்டாகிறது.

‘சலம்புணர்க் கொள்கை சலதியொடாடிக்
குலந்தரு வான்பொருட் குன்றம் தொலைத்த
இலம்பாடு நாணுத் தகும்’ என்று

கண்ணகியின் வீடு திரும்பும் கோவலன் கையில் பொருளின்றி வருந்துகின்றான். அவன் முன்பு வெறுப்போ, சினமோ கசப்போ இன்றி நலங்கேழ் முறுவல் நகைமுகம் காட்டிக் கூறும்சொற்கள் ‘சிலம்புள கொண்ம்’ என்பது இந்த இரண்டு சொற்கள் கொண்ட ஒருவரிச் சொல்லால் கண்ணகியின் பாத்திரப்படைப்பு மேலும் சிறக்கிறது.

கற்புக்கரசிகளில் பேரரசியாக விளங்கிய கண்ணகி மாற்றுக்கருத்து கூறாது. தன் மாண்பினை செயலால் உணர்த்துகிறாள். ‘ஏடலர் கோதாய் எழுக’ என்று கோவலன் கூறிய உடன் மறுமொழி கூறாது உடன் புறப்படுகின்றாள்.

வஞ்சிக்கப்பட்ட கண்ணகி தன் குலப் பெருமை, பட்டினத்து வாழ்வுப் பெருமை, எல்லாவற்றையும் துறந்து, கணவன் சொல்லிற்கு கட்டுபட்டு தன்பெரும் குணத்தால், முன்பின் அறியாத ஊரான மதுரைக்குப் புறப்படுகிறாள். கையில் பொருள் இல்லை. காலில் இரு சிலம்பு

மட்டுமே உள்ள நிலையில் துணிந்து எழுந்து உடன்வந்த கண்ணகியின் பெருமையின் முன்பு, கோவலன் இரஞ்சி நிற்கிறான். 'எழுக என எழுந்தாய் என் செய்தனையே' என்று உருக்கமாகப் பேசுகிறான்.

அதற்குப் பதில் கூறும் கண்ணகி, நான் படும் துயரத்தை விட, உங்கள் தாய் தந்தையர் என்னைக் கண்டு வருந்துவதற்காகவே, நான் வருந்துகிறேன் என்று அடுக்கடுக்காக தான் இழந்ததைப் பட்டியலிடுகிறாள். அறவோரைப் பேணல், விருந்தெதிர்கோடல், சுற்றம் தழுவுதல், கொழுநன் குறிப்பறிந்து ஒழுகுதல் முதலியன கற்புக்கடம் பூண்ட பெண்களின் தலையாய பண்பு. கோவலனைப் பிரிந்ததால் இக்கடமைகளைச் செய்ய முடியாத கண்ணகியின் நிலையினை,

'அறவோர்க்களித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க்கு எதிர்த்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை'

என தன்னிலைக்குத் தானே இரங்குகின்றாள் மேலும் 'போற்றா ஒழுக்கம் புரிந்தீர்' என்று கண்ணகி கோவலனிடம் தான் கண்ட ஒரே ஒரு குறையைக் கூறுகின்றாள். இப்பண்பு இன்றைய இல்லறப் பெண்டீரிடம் இருந்தால் இல்லறம் நல்லறமாகும்.

கணவனோடு இழந்த பொருள் மீட்ட வாணிபம் நடத்துவதற்காக மதுரைக்குப் புறப்பட்ட கண்ணகியின், வண்ணச் சீறடி மண்மகள் அறியாத பாதங்கள் துன்புற்றன. வழியில் உள்ள பரல் கற்கள் காலில் பொருந்தி, கொப்புளம் உண்டாக்கியது. கண்ணகி அடைத்த பெரும் துயரத்தைக் கவுந்தியடிகள் மாதுரியிடம் கூறு அடைக்கலமாகக் கண்ணகியை கொடுக்கும் போது,

'கடுங்கதிர் வெம்மையின் காதலன் தனக்கு
நடுங்கு துயர் எய்தி நாப்புலர வாடித்
தன்துயர் காணாத் தகைசால் பூங்கொடி'

என்று கண்ணகியைப் பாராட்டுகிறார்.

கண்ணகி தனிக்குடித்தனம் நடத்தும் பொழுதும், விருந்தோம்பலினும் மாமியார் மெச்சிய சிறந்த மருமகளாகக் காட்சி தருகிறாள். மாதுரி வீட்டில் கோவலனுக்கு இறுதியாக சமைத்த உணவை 'குமரி வாழை இலைபரப்பி' பரிமாறும் கண்ணகியின் செயல் கல்நெஞ்சையும் கரைய வைக்கிறது.

கண்ணகி தன்னைப் பிறர் பாராட்டும் உரைக்கு நாணுகிறாள். இன்றைக்கு இருக்கும் குலமகளிர்கள் பாராட்டுக்கும், முகஸ்துதிக்கும் பழகிப் போனவர்கள். தெய்வம் உற்ற சாலினி கண்ணகியின் புகழை கொங்கைச் செல்வி குடமலையாட்டி, தென் தமிழ்ப்பாவை, என்றெல்லாம் புகழ்கிறாள். பாராட்டுரை கேட்டு மயங்காத பாவையாக கண்ணகி படைக்கபட்டிருக்கின்றாள்

சிலம்பு எழுந்த காலகட்டத்தில் இசையும், நாட்டியமும் குலப் பெண்கள் கற்பது இல்லை. இவை பரத்தையர் குலப் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டவை. கண்ணகி கோவலனுடன் வெளியிடங்களுக்குச் சென்று அவனை மகிழ்விக்கவில்லை. படிதாண்டாப் பத்தினியாகப் படைக்கப்பட்டுள்ளாள். கண்ணகி சங்க இலக்கியங்களில் தலைவனுடன் தலைவி கடல் விளையாடுதல், விழாக்காணல், நீராடல் போன்றன இடம் பெறுகின்றன. கண்ணகியுடன் கோவலன் சில ஆண்டுகள் மட்டுமே வாழ இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். கணவன்

விருப்பம் அறிந்து அவள் செயல்படவில்லையோ என எண்ணத் தோன்றுகிறது. குலப் பெண்களுக்கு இவ்விளையாட்டுகள் உரியன,

‘ஆறும் குளனுங்காவும் ஆடிப்

பதியிகத்து நுகர்தலுமுரிய வென்ப’

என்று தொல்காப்பியர் கூறுகிறார்.

கண்ணகி அடக்கத்தின் காரணமாகவே வெளியில் செல்லாமல் இருக்கிறாள். கணவன் மதுரைக்கு ‘எழுக’ என்று சொன்ன உடன் எழக் காரணம் ஒன்று கணவன் சொல்லை மறுக்கக் கூடாது, இரண்டாவது அவன் விருப்பப்படி இனியாவது நடப்போம் என்று, எண்ணுவது கண்ணகி எதிர்த்துப் பேசி தடுத்திருந்தால் காப்பிய நோக்கம் நிறைவேறி இருக்காது.

கண்ணகி வாழ்வின் பெரும் பகுதியை ‘அறவோர்க்களித்தல்’ என்ற அறப்பணியில் செலவு செய்ததும் கோவலனைப் பிரிய ஒரு காரணம். வாழ்வில் எதற்கும் ஓர் வரையறை வேண்டும். அதனை மீறும் போது வாழ்வு துன்பமாகி விடுகிறது. இதுதான் கண்ணகி வாழ்விலும் நிகழ்ந்துள்ளது.

**2. உறுதியான கற்பு ஊரையும் எரிக்கும்**

கோவலன் கொலை புரிவதற்கு முன்புவரை இருந்த கண்ணகியின் நிலைவேறு. கோவலன் கொலையுண்ட பின் தோன்றிய கண்ணகியின் நிலை வேறு. கொலையுறும் முன்புவரை பூவாக, நீராக அடக்கமாக இருந்த கண்ணகி, கோவலன் கொலையுண்ட பின் புயலாக, காட்டாற்று வெள்ளமாக, நெருப்பாக பொங்கி எழுகிறாள். ஒரு பாவமும் அறியாத கோவலன் கொல்லப்பட்டபோது, அவன் ‘கள்வன்’ என்று குற்றம் சுமத்தி கொல்லப்பட்டதற்கே அவள் சீற்றம் கொள்கிறாள்.’ காய்கதிர்ச் செல்வனே கள்வனோ என் கணவன்’ என்று பொங்கி எழுகிறாள். அதன்பின் ஆட்சிமுறை, அரசநீதி ஆகியவற்றின் பக்கம் பாய்கிறாள். மதுரைமாநகரத்துப் பத்தினிப் பெண்களைப் பார்த்து தன் கற்பின் திண்மையை நோக்கி முறையிடுகிறாள்

‘நிறையுடைப் பத்தினிப் பெண்டீர்காள்

கள்வனோ அல்லன் கணவன் னென் காற்சிலம்பு

கொள்ளும் விலை பொருட்டாற் கொன்றாரே’

என்று விளக்கம் கூறுகிறாள். பிறகு கண்ணகி ‘பெண்டீரும் உண்டு கொல் பெண்டீரும் உண்டு கொல்’ என்று நீதி கேட்கிறாள். “ஈன்ற குழவி எடுத்து வளர்க்குறூஉம் சான்றோரும் உண்டு கொல்” எனக் குமறுகிறாள். ‘தெய்வமும் உண்டு கொல்’ என்று தெய்வத்திற்கே சவால் விடுகிறாள்.

முன்பின் அறியாத மதுரைமாநகரிலே கொதித்துப் புலம்பி அழும் ஒரு அபலைப் பெண் அல்ல கண்ணகி. ஒரு புதிய நாட்டில், புதிய சூழலில் தன்னந்தனியாக, கிடைக்காத நீதியைத் தேடிப்பெற்ற முதல் புரட்சிப்பெண் கண்ணகி.

அரண்மனை வாயிற் காவலனிடம் ‘அறிவறைபோகிய பொறியறு நெஞ்சத்து இருமுறை பிழைத்தோன் வாயிலோயே’ என்று துச்சமாக விளிக்கின்றாள்.

‘தேராமன்னா செப்புவதுடையேன்’ என்றும் அறச்சீற்றத்துடன் அரசன் முன் நின்று ‘நற்றிறம் படராக் கொற்கை வேந்தே’ என்றும் விளிக்கின்றாள். அன்றைய சூழலில் வழக்குத் தொடுப்பவர்

நீதி வழங்கும் அரசரைப் பார்த்து, விளக்கம் சொல் எம் இறைவா! எம் தலைவா! “பட்டாங்கு யானுமோர் பத்தினியே யாமாகில் ஒட்டேன் அரசோடொழிப்பேன் மதுரையை” என்று கூறுகிறாள் இக்கூற்றில் “கற்பே அவளது சக்தி” என்ற உண்மை வெளிப்படுகிறது.

கணவன் இறந்தபின் மற்ற பெண்களைப் போல் எரி மூழ்காமல், கணவன் விருப்பத்தை நிறைவேற்றவும், மன்னனைக் கண்டு நீதி கேட்கவும், அவள் கண்ட கனவு வழிகாட்டுகிறது.

**முடிவுரை**

1. கணவன் துயரில் பங்குபெறுபவரும், கணவனின் துன்பம் கண்டு துடிப்பவருமே கற்புடையவள் என்ற புதிய கோட்பாட்டை இளங்கோ சிலம்புவழி உணர்த்துகிறார்.
2. கோவலன் வாழ்வை முடித்தது ஒற்றைச் சிலம்பு கண்ணகிக்கு சாட்சியாக நின்று அவள் தொடுத்த வழக்கிற்கு வெற்றியைக் கொடுத்தது.
3. காலில் உரசவேண்டிய சிலம்பு கைகளில் பற்றியதால் பேரழிவு உண்டானது. சிலம்பு பிரிந்ததால் கோவலனும் கண்ணகியும் பிரிந்தனர். கோவலனின் ஒற்றைச் சிலம்பு பாண்டியனை நெறிபிறழச் செய்தது கண்ணகியின் கையிலருந்த சிலம்பு பாண்டியனைப் பழிவாங்கி, நீதியை உலகில் நாட்டியது.
4. கோவலன் கைக்கொண்ட சிலம்பு அவன் உயிர் பறித்து ‘கள்வன்’ என்ற பழிச்சொல்லையும் பெற்றுத்தந்தது. கண்ணகி கையில் ஏந்தியசிலம்பு குற்றம் சாட்டிய பாண்டியனையே வீழ்த்தி, மதுரையை எரித்து, சேரனால் கோயிலில் கண்ணகியை தெய்வமாக்கி, அமரச்செய்தது.
5. மதுரையில் கீழ்த்திசையில் கணவனோடு புகுந்து, மேல் திசையில் தனியாகச் சென்ற கண்ணகியின் உள்ளம் எரிமலை போல் வெடித்துத் தணிந்து இறுதியில் தென்னவன் தீது இலன் என்று அமைதி கொள்கிறது.
6. சிலப்பதிகாரத்தின் முற்பகுதி அறக்கற்பும் பிற்பகுதி மறக்கற்புமாக அமைந்து சமுதாயத்திற்கு பயன்படும் நூலாக அமைந்துள்ளது.

**துணைநின்ற நூல்கள்**

1. ந.சஞ்சீவி – சிலப்பதிகார விருந்து, காவியபதிப்பகம், இரண்டாம்பதிப்பு,2005.
2. முனைவர். இராமகுருநாதன், வீ.முத்துக்குமார சுவாமி } சிலப்பதிகாரம் ஆய்வுக்கோவை, முதல் பதிப்பு 2004
3. முனைவர். சு.பானுமதி - புரட்சிப் பெண்கண்ணகி, சிலப்பதிகாரச் சிந்தனைகள், ஆய்வுக்கோவை, மெய்யப்பன் பதிப்பகம், முதல் பதிப்பு, 2009